සියලු ම හිමිකම් ඇවිරිණි/All Right Reserved / முழுப் பதிப்புரிமையுடையது

# ශ්‍රී ලංකා සංවර්ධන පරිපාලන ආයතනය
# இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவகம்
# SRI LANKA INSTITUTE OF DEVELOPMENT ADMINISTRATION

## இலங்கை கணக்காளர் சேவை உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2020(I)

காலம் 03 மணித்தியாலங்கள்

**அறிக்கை எழுதுதலும் முகாமைக்கு தகவல்களை சமர்ப்பித்தலும் - 08**

විභාග අංකය Index No / சுட்டெண் ..........................................

**ஐந்து (05) வினாக்களுக்கு மாத்திரம் விடைதருக.**

---

01. தங்களது மாவட்டத்தில் தொழில் முனைவோரை ஊக்குவிக்கும் நோக்கில் **"புதிய ஏற்றுமதி தொழில் முயற்சியாளர்களை உருவாக்குதல்"** எனும் தலைப்பில் ஒருநாள் கருத்தரங்கொன்றை மாவட்ட செயலகத்தில் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஜப்பான் நாட்டினது வெளிநாட்டு அமைச்சின் நிதியுதவியுடன் செயற்படுத்தப்படும் இந்த நிகழ்ச்சித்திட்டத்தை ஒருங்கிணைப்புச் செய்யும் பொறுப்பு மாவட்ட செயலாளரினால் தங்களுக்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளது. கருத்தரங்கிற்கான நிகழ்ச்சி நிரலின் வரைவை 02 வாரங்களுக்குள் தாங்கள் தயார்படுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

    அ. உத்தேச நிகழ்ச்சி நிரலை வரைவு செய்க. (08 புள்ளிகள்)

    ஆ. மேலே குறிப்பிடப்பட்டுள்ள நிகழ்ச்சி நிரலின் பிரதான பகுதிகள் மூன்றை (03) தெரிவுசெய்து அவை இந்த ஒத்துழைப்பு நிகழ்ச்சித்திட்டத்துடன் தொடர்புபடும் முறையை விளக்குக. (12 புள்ளிகள்)

02. அரசாங்க பெறுகை நடைமுறையில் காணப்படும் சில பிரச்சினைகள் காரணமாக பல்வேறுபட்ட ஊழல் மற்றும் முறைகேடுகள் நிகழ்வதாகவும், அதன் காரணத்தினால் பொதுமக்களுக்கு வழங்கப்படும் சேவைகள் உரிய முறையில் வழங்கப்படுவதில்லை எனவும் பல்வேறுபட்ட கருத்தாடல்கள் எழுந்துள்ளன.

    அ. தற்போதைய பெறுகை நடைமுறையில் காணப்படும் தாங்கள் அவதானித்த பிரச்சினைகள் நான்கினைக் (04) குறிப்பிடுக. (08 புள்ளிகள்)

    ஆ. அவ்வாறான பிரச்சினைகளைத் தவிர்ப்பதற்கு பெறுகை நடைமுறைக்கு தகவல் தொழில்நுட்பத்தை உட்புகுத்த வேண்டிய முறையை விளக்கி பெறுகை ஆணைக்குழுவின் செயலாளரை அறிவூட்டும் பொருட்டு தொழில்நுட்ப முன்மொழிவொன்றைத் தயாரிக்க. (12 புள்ளிகள்)

03. தாங்கள் பணியாற்றும் அமைச்சில் உள்ளக திறன் அபிவிருத்தித் திட்டத்திற்கு அமைய ஒவ்வொரு மாதத்திலும் ஒரு நாளை நிறுவனத்தின் திறன் அபிவிருத்திக்குப் பயன்படுத்துதல் வேண்டும். எதிர்வரும் பயிற்சி நாளில் **"அரசாங்கத் துறையில் பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மை"** எனும் தலைப்பில் உரையாற்றும் பொறுப்பு தங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி உரையில் உள்ளடக்கப்பட வேண்டிய முக்கிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுக. (20 புள்ளிகள்)

04. தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள தரவுகளுக்கு அமைய 2018-2023 காலப் பகுதியில் மொத்த உள்நாட்டு உற்பத்தி பின்வருமாறு (படம் 01)




*படம் 01*

இவ்வாறு மொத்த உள்நாட்டு உற்பத்தியின் மதிப்பிறக்கத்தினால் எழக்கூடிய பிரச்சினைகளை சுருக்கமாக கலந்துரையாடுக. (20 புள்ளிகள்)

05. இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்டுள்ள தரவுகளுக்கு அமைய, வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக 2021-2024 வருட காலப் பிரிவிற்குள் பணியாளர்களின் வெளியேற்றம் பின்வருமாறு (படம் 02)




படம் 02

அ. இந்தத் தரவுகளை பகுப்பாய்வு செய்து எதிர்காலத்தில் இலங்கை அடைந்துகொள்ள உத்தேசிக்கும் அபிவிருத்தி இலக்குகளுக்கு தடையாக காணப்படும் சவால்கள் குறித்து கலந்துரையாடுக. (10 புள்ளிகள்)

ஆ. மேற்படி சவால்களுக்குப் பொருத்தமான தீர்வுகளை சுருக்கமாக விளக்குக. (10 புள்ளிகள்)

06. பின்வரும் தலைப்புகள் தொடர்பில் சிறு குறிப்பு எழுதுக.

i. வருடாந்த வரவுசெலவுத்திட்டம்

ii வருடாந்த பொருள் சுற்றாய்வு செயன்முறையை வினைத்திறனாக்கல்

iii. அரச துறையில் இணைய வழியில் கட்டணம் செலுத்துவதற்கு அக்கறை செலுத்துவதன் முக்கியத்துவம்

iv. சமூக ஊடகங்களில் சுட்டிக்காட்டப்படும் அரச நிதிப் பிரச்சினைகள் (20 புள்ளிகள்)

***********************